தமிழ்நாடு தகவல் ஆணையம்
எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்),
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 09.11.2020**

**முன்னிலை**

**திரு. ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

……………

**வழக்கு எண். SA089/F/2020**

**திரு S.தமிழரசன் … மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்பு செயலாளர்,**
**பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை,**
**தலைமைச் செயலகம், சென்னை - 600 009. … பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **16.08.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **27.09.2019** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **02.01.2020** |

******

**ஆணை**

இவ்வழக்கு தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய இயலாத காரணத்தால் இன்று (09.11.2020) தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு S.தமிழரசன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்புச் செயலாளர், பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை, தலைமைச் செயலகம், சென்னை ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் **16.08.2019** தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், வன்னியகுல க்ஷத்திரியர்கள் பொதுநிலை அறக்கட்டளைகள் மற்றும் நிலக்கொடைகள் சட்டம் 2018-படி அமைக்கப்பட்ட வாரியத்தின்

அலுவலக முகவரி விபரம், தலைவர், உறுப்பினர் செயலர், உறுப்பினர்கள், தொலைபேசி எண், Email முகவரி விபரம், வாரியம் சார்ந்த மனுக்கள் மற்றும் புகார்கள் அனுப்பவேண்டிய முகவரி விபரம், தலைவர், உறுப்பினர்கள், நிர்வாக அதிகாரிகள் நியமன ஆணை நகல்கள், இவர்களை தேர்ந்தெடுத்து நியமிக்க கடைபிடித்த நிர்வாக தகுதி நடைமுறைகள் நியமிக்கப்பட்ட Selection Committee விபரம், உறுப்பினர், தலைவர், உறுப்பினர் செயலர் பதவி நியமனங்களுக்கு விண்ணப்பங்கள் கேட்டு அரசால் தரப்பட்ட அறிவிப்பு விபரம், தலைவர், உறுப்பினர் பதவிகளுக்கு வரப்பெற்ற விண்ணப்பங்கள் விபரம் இந்த நியமனங்கள் சார்ந்த அரசு நடவடிக்கைகள் சார்ந்த குறிப்பாணை நடவடிக்கைகள் குறித்த நகல்கள், Selection Committee அமைக்கப்படவில்லை எனில் நியமனங்களுக்கு கடைபிடித்த வரையறைகள், மற்றும் இவர்களை தேர்ந்தெடுத்த துறை அதிகாரி விபரம், வாரிய செயல்பாடுகளுக்கு அரசு ஒதுக்கிய நிதி விபரம், வாரியசட்டப்படி வாரியம் செயல்பட இதுவரை நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகள் பட்டியல் விபரம், வாரிய Chief administrative officer, தலைமை சர்வேயர் விபரம், இதுவரை (பிப்ரவரி 2019 லிருந்து நடந்த வாரியக்கூட்டங்கள், கூட்டப்பொருள்கள், தீர்மான நகல்கள் விபரம் போன்ற தகவல்களை வழங்கக்கேட்டு பொதுத் தகவல் அலுவல, துறைச்செயலர் BC,MBC,MW துறை, தலைமைச்செயலகம், சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 16.09.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலில் திருப்தியடையாத மேல்முறையீட்டாளர் 27.09.2019 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர்/ O/o BC, MBC, MW துறை செயலர், தலைமைச் செயலகம், சென்னை அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 02.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தொலைபேசி வாயிலாக ஆஜராகி, பொதுத் தகவல் அலுவலர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தெரிவித்து தான் கோரிய தகவலை பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளருக்கு 16.09.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளதாகவும் ஆணையம் உத்தரவிடும்பட்சத்தில் முழுமையான தகவலை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு சரியான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- மேல்முறையீட்டாளர் **16.08.2019** தேதியிட்டு கோரிய தகவல்களை முழுவதுமாக **இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வாரங்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்**

மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

- மேல்முறையீட்டாளர் 16.08.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.

ஒம்/- (ச.த. தமிழ்குமார்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA089/F/2020</u>

பெறுநர்

பொதுத் தகவல் அலுவலர்/ அரசு சார்பு செயலாளர்,
பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை,
தலைமைச் செயலகம், சென்னை - 600 009.

<u>மனுதாரர்</u>

திரு S.தமிழரசன்,
எண். 404/HIG, TNHB வள்ளுவர் நகர்,
தருமபுரி - 636 705.

Copy to: Judgement File/ Spare.
SM/ PC-19.11.2020